இந்நூலில் கூறப்பெறும் அட்டாங்க யோகம் ஆறாதார யோகத்திற்கு அடிப்படையாக விளங்குவது. வாழ்க்கையில் மக்கள் அறிந்து கடைப்பிடிக்கத்தக்கது. இதனை உணர்ந்த பின்னரே இராஜ யோகம் எனப்படும் ஆறாதார யோக பயிற்சியை ஆசிரியன் வாயிலாக மக்கள் மேற்கொள்ள வேண்டும். அனுபூதிமான்களோடு பழகியும் உணர்ந்தும் கடைப்பிடிக்கத் தக்க யோகம் இது.

இவை போன்ற பல நுண் பொருள்கள் அடங்கிய இந்நூலைக் கற்று அத்தனை மக்கட்குத் தெளிவாக எளிய நடையில் எடுத்துரைக்கும் முயற்சியில் நம் அன்பர் திருமந்திரமணி திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் வெற்றி கண்டுள்ளார். இவர் எழுதியுள்ள இந்நூலில் ''ஒன்றவன்தானே'' என்ற பாடலுக்கு எழுதிய உரைவிளக்கம் மிகச் சிறப்புடையதாய் விளங்குகிறது. இவ்வாறே தான் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு தலைப்புகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் தோத்திர சாத்திர இலக்கிய மேற்கோள்களோடு இவர் எழுதியுள்ள திறன் மிகவும் பாராட்டத்தக்கதாயுள்ளது.

பல்லாண்டுகளாகத் திருமந்திரத்தை முறையாகக் கற்றும் அனுபூதிச் செல்வர்களோடு பழகியும் இந்நூலைத் தெளிவாக உணர்ந்தும் பல இதழ்களில் கட்டுரை வடிவில் வெளியிட்டு வந்துள்ளதை திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள், வடமொழி நூல்கள் முதலானவற்றை மேற்கோள் காட்டி விரிவு செய்தும் அழகுறுத்தியும் இவற்றை நூல் வடிவில் இவர் தமிழ் மக்களுக்கு அளிக்கின்றார். பாரதி பதிப்பகத்தார். இந்நூலினை ஒளியச்சில் செம்மையுற அச்சிட்டுள்ளனர்.

அன்பர் திருமந்திரமணி திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் எல்லா நலங்களோடும் இனிது வாழ்ந்து,தொடர்ந்து தன் திருமந்திர அனுபவ உரைகளை மக்கட்கு வழங்கி வரவும் அன்பர்கள் இந்நூலைக் கற்றுப் பயன் பெறவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

★★★★★

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி

குருமகாசந்நிதானம், திருவாவடுதுறை ஆதீனம்

அவர்கள் வழங்கியருளிய

அருளாசி

சமயத்துறையில், தமிழ் மொழியிலே தோத்திர சாத்திர நூல்களுக்கு மூலமாக இருப்பது திருமூலர் திருமந்திரம். பன்னிரு திருமுறையில் திருமந்திரம் பத்தாந் திருமுறையாக விளங்குகிறது. தமிழகத்துச் சித்த பரம்பரைக்கு மூலமாகவும் மிகச் சிறந்த யோகியாகவும் ஞானியாகவும் விளங்கியவர் திருமூலர். திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்து வீற்றிருந்து இந்தச் சித்தநாதர் அருளிய திருமந்திரம் ஆகிய தமிழ் மூவாயிரம் அறிவால் விளைந்த பயன் அன்று. சிவானந்த அனுபவத்தால் விளைந்த பேறு ஆகும். உலக மக்கள் அனைவரையுமே உய்விக்கத் தமிழகத்தில் மலர்ந்து மணம் பரப்புகின்ற அனுபவ ஞானத் திருநூல்.

உலகத்து யாவருடைய உள்ளத்திலும் எஞ்ஞான்றும் நின்று நலம் பயக்க வல்லதான இத்திருநூலின் அரிய பொருளையெல்லாம் அன்பர்கள் எளிதில் தெளிவாகத் தெரிந்து பயன்கொள்ளும் வண்ணம் தமிழக அரசு முன்னாள் தலைமைச் செயலாளரும் நமது ஆதீன அன்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்களுமாகிய திரு. டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் கலைமகள், திருக்கோயில் ஆகிய திங்கள் இதழ்களில் கட்டுரை அமைப்பில் எழுதி வெளியிட்டு வந்தார்கள். அவற்றில், வேண்டும் மாற்றங்களையும் சேர்க்கைகளையும் சிறக்கச் செய்து ஒரு தனி நூலாக இப்பொழுது வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது.

புகழ் பெருக அரசுப்பணிகளைச் சிறப்பாக ஆற்றி வந்ததற்கு இடையேயும் இவர்களது உள்ளத்தைக் கவர்ந்து பற்றிக் கொண்டது திருமந்திரம். அருள் நலச்சிறப்பால், இவர்கள் திருமந்திரக் கடலில் முகந்து கொண்ட நன்முத்துக்களை நமது ஆதீனத்திலும் தமிழக நற்சபைகளிலும் வாரி வழங்கி மகிழ்வித்தவர்கள். இவர்களது திருமந்திர உள்ளம் இப்பொழுது நூல் வடிவு கொண்டு தமிழக உலா கொள்ள வருகிறது. திருமந்திரச் செல்வரின் இனிய இந்நூல் தமிழ் மக்கள் அனைவரிடத்தும் திகழ்ந்து மேன்மைமிகு வாழ்வினை அருளவும், அன்பர் அவர்களது திருமந்திரப் பணிநலம் உலகு அனைத்தும் பயன் கொளும் வண்ணம் சிறக்க இவர்கள் நலம்மிக்க நீடுவாழ்வில் திகழவும் அருள நம் வழிபடுமூர்த்தி அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

திருவாவடுதுறை
13-08-1996

★★★

டாக்டர் பா. இராமன் அவர்களின் அணிந்துரை

திருக்கயிலாயத்தில் நந்தியானவர் திருமூலருக்கு ஒன்பது ஆகமங்களை விளக்கியுரைத்தனர். திருமூலர் மண்ணுலகிற்கு வந்து மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகம் புரிந்தார். தாம் முன்பு கேட்ட சிவாகமங்களின் சாரத்தை மூவாயிரம் பாடல்களாகப் பாடியருளினார். இப்பாடல்களின் தொகுப்பே திருமந்திரம் என வழங்குகிறது. இதனைத் தனித்தமிழ் ஆகமம் என்பர். மந்திரம் என்பதற்கு 'நினைப்பவரைக் காப்பது' என்று பொருள். திருமந்திரம் எக்காலத்தும் நினைப்பவரைக் காக்க வல்லது. ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்றதால், திருமந்திரம் சிவசொரூபம் என்க. பத்தாம் திருமுறையான திருமந்திரம் தாய் எனவும், ஏனைய திருமுறைகள் அதன் சேய் எனவும் கூறுவர். சமயகுரவர் நால்வர்தம் திருப்பாடல்களைப் புகழ் நூல்கள் எனவும் திருமந்திரத்தைப் பொருள் நூல் எனவும் இயம்புவர். இதன் பெருமை அளவிடற்கரிது.

காண்பான், காட்சி, காணப்படு பொருள் என்னும் திரிபுடி, சுத்தமாயை, அசுத்தமாயை, சத்திகள், பரசிவம் ஆகியோரைத் திருமூலர் 'விளங்கக் கண்டேன்' என்றார். இந்நூல் நுதலிய பொருள் இதுதான். பதியின் இயல்பையறிந்து பாசத்தை நீக்கிப் பசுவானது பதியை எவ்வாறு அடைதல் வேண்டும் என்னும் நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என வகுத்துரைக்கின்றார். சிவயோகத்தின் சிறப்பினை எடுத்துரைத்தாலும் அன்பே சிவம் எனும் அன்பு நெறியையே யாவற்றினும் மேலானது என்று கூறுகின்றார். முதன்மையான சித்தாந்த சாத்திரங்கள் கூறுவதுபோல் பதிபசுபாச இயல்பினை விளக்கிப் பதியை அடையும் நெறியையும் இந்நூல் தெளிவாகக் காட்டுவதால் இது சாத்திரமும் தோத்திரமும் பொதிந்த பொன்னூல் எனலாம்.

திருமந்திரச் செம்மல் சான்றோர் திரு. டி.வி.வெங்கட்டராமன், இ.ஆ.ப., (ஓய்வு), அவர்கள் நுண்மாண் நுழைபுலம்மிக்கவர். திருமூலரின் திருவருளுக்குப் பாத்திரமானவர். மூலன் செய்த மூவாயிரத்தையும் முற்றக்கற்றவர். சைவச்சான்றோர் வரைந்த திருமந்திர உரைகளைப் படித்துச் சுவைத்தவர். சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் புலமை பெற்றவர். பல்லாண்டுகளாகத் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று எண்ணித் திருமந்திர மாநாடு நடத்துவதும், திருமந்திரச் சொற்பொழிவு ஆற்றுவதும், மாத இதழ்களில் கட்டுரை எழுதுவதுமான அரிய தொண்டினைச் சிறிதும் அயராது செய்து வருகின்றார். இன்று திருமந்திரத்தைப் படித்து உணர வேண்டும் என்ற அவா நூற்றுக்கணக்கானவருக்கு ஏற்பட்டதற்கு இப்பெரியாரே காரணமாவார் மிகையன்று.

பல்லாண்டுகளாகத் தாம் பேசியும் எழுதியும் வந்த திருமந்திரச் செம்பொருளை நூல் வடிவாக ஆக்கியுள்ளார். எளிதில் புரிந்து கொள்ள முடியாத பாடல்களுக்குத் தெளிவான விளக்கம் அளித்துள்ளார். அதனால் மூலநூலைப் படித்து அறிய முடியாதவர்கள் இந்த உரைநடை நூலைப் படித்து அறிந்து சுவைக்கலாம்

பதி பசு பாசம் ஆகிய முப்பொருளையும் பதியை அடைவதற்குரிய நெறியையும் எத்தனை வகையில் விளக்கினாலும் புரியாது என்பதால்,

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார், திருநீலக்கண்டக்குயவனார், சேக்கிழார், தாயுமானவர், பட்டினத்தார் போன்ற அருளாளர் தம் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவர்தம் அமுத மொழிகளையும் காட்டிக்கூற வந்த பொருளை கல்மேல் எழுத்துப்போல் நெஞ்சத்தில் பதித்து விடுகிறார்.

திருமுறைகளை மேற்கோளாகக் காட்டியதுபோல் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் ஆகிய சித்தாந்த சாத்திரங்களையும் காட்டி விளக்கியுள்ளார். இவர் தம் நூல் கற்கண்டு எனலாம், மாணிக்கம் எனலாம். எப்பக்கத்திலும் இனிக்கின்றது. எப்பக்கத்திலும் ஒளி வீசுகின்றது. இவர் தம் செவ்விய மொழிநடையும் செறிவான பொருளுரையும் ஆதியோடந்தமாய்ப் பரந்து மிளிர்கின்றன. என்னால் எப்பொருளைச் சான்றாகக் காட்டுவது எனத் தேர்ந்து சொல்ல இயலவில்லை. இருப்பினும் சிலவற்றை மட்டும் சான்றாகக் காட்டுவல்.

''குடம் உடைந்தால் ஓடு, உடல் உடைந்தால் பயன் உண்டா? விஞ்ஞானம் குறை அறிவு; மெய்ஞ்ஞானம் நிறை அறிவு. அறிவால் பார்க்காதே அருளால் பார். இரசவாதத்தால் இரும்பு பொன்னாதல்போல் குருவின் திருவடித் தீக்கையால் சீடன் சிவசமத்துவம் அடைவான். அலை ஓய்ந்த ஆழ்கடல்போல் தெளிந்த சிந்தையர்.

செல்வமும், கல்வியும் சிவனைக் காணமாட்டா. மாணிக்கத்துள்ளே மரகதம் காண முடியுமா? முடியும். சிவனுள்ளே சக்தி. பிறப்புக்கெட ஞானமலர் கொண்டு அருச்சிக்க. தூல தேகம் போய்ச் சூக்கும தேகமாகிப் பொன்னுடல் உண்டாகி ஈனமில் காயமாகிச் சத்திவடிவாய் நிலை பெறுவர் தூய அடியார். ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள், ஆசை மனத்தின் செயல். அது பற்றே. மனம் இறந்த ஞானிகட்கு ஆசை தோன்றாது. இதுவே ஞானியின் உச்ச நிலை. தான் சிவத்தை விழுங்க நினைப்பது பற்று; தன்னைச் சிவம் விழுங்குவது தன்னை இழந்த நிலை''.

இவ்வாறு எத்தனை எத்தனையோ நன்முத்துக்களைக் கண்டுகளிக்கலாம். ஞானத்தை விளக்க குரு சீடர் வினா விடையாக அமைத்திருப்பதும், கிருத்துவப் பெரியார், அடைக்கலப்பத்தில், 'மலரடிக்கே கூவிடுவாய். அடியேன் நின் அடைக்கலமே' என்ற வரிகளை ஒரு தாளில் எழுதி வைக்கச் சொல்லிப் பின் காலவயப்பட்டதும், இந்நூலாசிரியருக்கு அடைக்கலப்பத்தே துன்பக்காலத்தில் உற்றதுணையாக அமைந்ததும் ஆகிய செய்திகளைக் கற்போர் எவரும் சிவனுக்கே அன்பராகுவர் என்பது திண்ணம்.

நூலறிவும் நுண்ணறிவும் மிக்க சான்றோர் திரு டி.வி.வெங்கட்டராமன், இ.ஆ.ப. (ஓய்வு), அவர்கள் தெய்வத் தமிழன்னைக்குச் சூட்டும் மணம் கமழ் மலரே இந்நூலாகும். இவர் எல்லா நலத்துடனும் பல்லாண்டு வாழ்ந்து இத்தகு அரிய நூல்கள் பலவும் ஆக்க வேண்டும் என்பதே என் விழைவு.

இவண்

ப. இராமன்

ஆசிரியர் முன்னுரை

பல ஆண்டுகளுக்கு முன்பு இது நடந்தது. ஒரு நாள் மாலை வழக்கம்போல் நான் சென்னையில், மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோவிலுக்குச் சென்றிருந்தேன். திருக்கோவிலில் அருள்மிகு கற்பகாம்பிகை சன்னிதி நுழைவு வாயிலுக்கு வெளியே இடது பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த ஒரு பலகை என் கண்களுக்குத் தென்பட்டது. அதில்,

''உடம்பார் அழியில் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார்'' **(திருமந்திரம்)**

என்று எழுதப்பட்டிருந்தது. இப்போது அந்தப் பலகை அங்கு இல்லை.

அதுவரை நான் திருமந்திரத்தைப் படித்திருக்கவில்லை. உண்மையில் அப்போது நான் சமய நூல்களைப் பொதுவாகப் படித்தது கிடையாது. தமிழ் மொழியில் சமய, தோத்திர, சாத்திர நூல்களைப் படிக்கும் வாய்ப்பினையும் பெற்றிருக்கவில்லை. அதற்குக் காரணம் நான் தமிழ் மொழியை முறையாகக் கற்காததுதான். பள்ளியிலும், கல்லூரியிலும் வடமொழியைக் கற்ற காரணத்தினால் தமிழ் மொழியைப் படிப்பதற்கு இடமே இல்லாமல் போய்விட்டது. திருமுறைகளைப் பற்றியும், சைவ சாத்திர நூல்களைப் பற்றியும் ஒன்றும் தெரிந்து கொள்ள இயலாத நிலையில் இருந்தேன். சித்தர்கள் இலக்கியம் என்றால் அது என்ன என்று கேட்கும் அளவுக்கு ஓர் அறியாமை நிலையில் இருந்தேன். சொல்லப்போனால், சமயத்தின் மீது அதிகப் பற்றில்லாததும் இதற்கு ஒரு விளக்கமாக இருக்கலாம் என்றும் நினைக்கிறேன்.

அருள்மிகு கற்பகாம்பாள் சன்னிதியில் நான் கண்ட திருமந்திரக் குறிப்பு என் உள்ளத்தில் ஒரு வித்தியாசமான உணர்வினை உருவாக்கியிருக்க வேண்டும். திருமந்திர நூலைப் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட்டது. அந்த நாட்களில் சென்னையில் அப்போதிருந்த மூர்அங்காடிக்கு நான் பழைய நூல்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதற்காக அடிக்கடி சென்று வருவது வழக்கம். மூர்அங்காடி தீக்கு இரையான பின்னர் பழைய நூல்களைக் காண்பதே அரிதாகி விட்டது. ஒரு பெரிய பொக்கிஷத்தை நாம்

இழந்து விட்டோம். ஒருமுறை நான் மூர் அங்காடிக்குச் சென்றிருந்தபோது திருமந்திர நூல் ஒன்று கிடைக்குமா என்று ஒரு கடையில் கேட்டேன். அந்த கடைக்காரர் வயதானவர். உடனே திருமந்திரத்தைப் பற்றி ஒரு சிறு நூலை எனக்கு எடுத்துக் கொடுத்தார்கள். ராஜாஜி அவர்களும் சோமு அவர்களும் சேர்ந்து எழுதியிருந்த கட்டுரைகளின் தொகுப்பு அது. கல்கியில் வெளிவந்த கட்டுரைகளைச் சேர்த்து ஒரு நூலாகப் பிரசுரித்திருந்தார்கள். நம்ப முடியாத மலிவு விலைக்கு அந்த நூலை வாங்கி, வீட்டிற்குச் சென்று படிக்கத் தொடங்கினேன். இன்னும் படித்துக் கொண்டிருக்கின்றேன். திருமந்திரத்தில் என்னை ஈடுபடுத்திய இறைவனுடைய பெரும் கருணையைப் பற்றி வேறு என்ன சொல்வது?

திருமூலர் பெருமான் அருளிச் செய்துள்ள திருமந்திர மணிமாலை விளக்க நூல்கள் போதிய அளவில் வெளிவரவில்லை என்றே கருதுகிறேன். வெளிவரும் நூல்களையெல்லாம் அவ்வப்பொழுதே வாங்கி விடுவேன். அவற்றையெல்லாம் படித்து, மனநிறைவு பெறும் வகையில் விளக்கம் பெறுவதில் என்னைப் போன்றவர்களுக்குப் பல இடர்கள் இருந்தன. பல நூல் ஆசிரியர்கள் தமிழ் மொழியிலே வல்லுநர்களாக இருந்த காரணத்தினால், அவர்கள் கொடுத்த தமிழ் மொழி விளக்கங்கள் பல நேரங்களில் எனது அறிவுக்கு எட்டுவதில்லை. வேறுசில நூல் ஆசிரியர்கள் தாங்கள் பெற்றிருந்த சாத்திர அறிவின் அடிப்படையில் சிறந்த விளக்கங்களைக் கொடுத்திருந்தாலும், எனக்குப் போதிய சாத்திர அறிவு கிடையாது என்பதால் அந்த விளக்கங்களை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலவில்லை. சாத்திர நூல்கள் படிக்காத என்னைப்போன்ற பல அன்பர்கள் இந்த இக்கட்டான நிலைமையில் இருக்கின்றார்கள் என்பதை நான் அனுபவத்தின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன்.

எப்படியிருந்தாலும் திருமந்திர மணிமாலையை நன்கு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற விருப்பம் வளர்ந்து கொண்டே வந்தது. மூவாயிரம் மந்திரங்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட மந்திரங்களைப் படித்துத் தெரிந்து கொள்வதில் அதிகப் பிரச்சினை தோன்றவில்லை. ஆனால், மற்ற மந்திரங்கள் வெகு கடினமாக இருந்தன. இந்த நிலை இரண்டு வகையில் ஏற்பட்டது. ஒன்று, மந்திரங்களில் பயன்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் இயல்பாகவே கடினமாக இருந்தன. இரண்டாவது, பல மந்திரங்களில் சொற்கள் எளிதாக இருந்தாலும் அவற்றின் பொருள் ஆழமாக இருந்தது. அவற்றைப் பற்றிய விளக்கங்களைப் பெறுவதற்கு, ஆழ்ந்த அறிவு தேவைப்பட்டது. அதைவிட முக்கியமானது ஒன்று, அந்தச் சொற்கள் உணர்வு நிலையில்தான் போதுமான பொருளைத் தரும் என்கிற எண்ணமும் எனக்கு ஏற்பட்டது. சாத்திர அறிவோ அல்லது ஆன்மிக அனுபவமோ இல்லாத எனக்கு இந்த நிலையில், திருமந்திரத்தை முழுமையாகப் படித்துச் சுவைப்பதற்குத் தேவையான ஆற்றல் என்றுமே கிடைக்காது என்கிற எண்ணமே மேலிட்டது.

மீண்டும் ஒருமுறை திருவருளின் பெருங்கருணையைக் காண முடிகின்றது. கொடைக்கானல் மலைப்பகுதியில் பெருமாள்மலை எனும் இடத்தில் பல ஆண்டு காலம் வாழ்ந்து வந்த ஒரு பெரியவரின் நட்புக் கிடைத்தது. அவரை ''பெருமாள்மலை ஐயப்ப சுவாமிகள்'' என்றும், ''ராமுடு சிவா சுவாமிகள்'' என்றும் அவருடைய சீடர்கள் பெயரிட்டிருந்தார்கள். என்னுடைய உறவினர் ஒருவருடைய உதவியோடு இந்தப் பெரியாரைச் சந்திக்கும் பேறு பெற்றேன். அடிக்கடி எங்கள் வீட்டுக்கு அவர்கள் வரத் தொடங்கினார்கள். திருமந்திரத்தில் ஆழ்ந்த அனுபவம் பெற்ற பெரியார் ஒருவரைச் சந்திக்கின்றோம் என்கின்ற உணர்வு ஏற்பட்டது. இரவு நேரங்களில் அவர் என்னுடன் தங்கும்பொழுதெல்லாம் திருமந்திரத்தில் காணப்படும் கருத்துக்களின் நுட்பத்தை அனுபவரீதியாக எனக்கு வழங்குவார்கள். மிகக் கடினமான மந்திரங்களைச் சில விநாடிகளிலேயே தெள்ளத்தெளிவாகப் புரிய வைத்துவிடுவார்கள். வாசி யோகத்தை அவர்கள் முழுமையாகப் பயின்றிருந்தார்கள். அவர்கள் விரும்பியிருந்தால் வாசியோக சாதனைகள் பலவற்றைச் செய்திருக்கக்கூடும் என்றும் நான் கருதுவதற்கு இடமுண்டு. குறிப்பாக எட்டாவது, ஒன்பதாவது தந்திரங்களில் காணப்படும் அனுபவ மந்திரங்கள் பலவற்றிற்கு எனக்குத் தெளிவாக விளக்கம் கொடுத்து உதவினார்கள். அவர்கள்தான் என்னைப் பேசச் சொன்னார்கள். கட்டுரைகளை எழுதச் சொன்னார்கள். அவர்கள் எனக்குச் செய்த உதவி அளவிடற்கப்பாற்பட்டது. அவருக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவன். அந்தப் பெரியார் இப்பொழுது நம்மிடையே இல்லை.

திருமந்திர மணிமாலை சைவப்பெருமக்களால் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது. சைவ சாத்திர நூல்களிலே இது ஒரு சிறந்த நூலாகவும் கருதப்படுகிறது. எனவே, சைவ சாத்திர நூல்களைக் கற்றறிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆவலும் ஏற்பட்டது. ஸ்ரீலஸ்ரீ தர்மபுர ஆதின மகாசன்னிதானம் அவர்கள் இதில் எனக்குப் பெருத்த துணையாக இருந்தார்கள். சாத்திர நுட்பங்களையெல்லாம் அவ்வப்போது எடுத்துக்காட்டி எனது சிந்தனையைத் தூண்டி விடுவார்கள். மேலும் மேலும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவலையும் உண்டாக்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை ஆதின மகாசன்னிதானம் அவர்களும் என்னை இவ்வாறே ஊக்கப்படுத்தினார்கள். இந்த இரண்டு பெரியார்களுக்கும் எத்துணை நன்றி கூறினாலும் தகும். தருமை மகாசன்னிதானம் அடியேனுக்குத் ''திருமந்திர மணி'' என்கிற பட்டம் கொடுத்ததும், திருவாவடுதுறை மகாசன்னிதானம் ''திருமந்திரச் செம்மல்'' என்கிற பட்டம் கொடுத்ததும் என் வாழ்க்கையில் நடந்த இரண்டு பொன்னான நிகழ்ச்சிகளாகும். இந்த இரண்டு பெரியார்களும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியிருப்பது நான் பெற்ற பேறாகும்.

திருமந்திரம் ஒரு அனுபவ நூல் என்றும், இங்கே கிடைக்கும் அனுபவ உண்மைகள் நம்மைச் சாத்திரங்களுக்கும் அப்பால் அழைத்துச் செல்கின்றன

என்றும், அதை அருள் அனுபவம் என்றும் கூறலாம். அந்த அருள் அனுபவம் நமக்கு முத்திப் பேற்றினை அளித்து நம்மைப் பேரின்பத்தில் ஆழ்த்தும் ஆற்றல் பெற்றது என்றும், திருமந்திரக் கல்வி அனுபவக் கல்வியாக அமைய வேண்டும் என்றும் சைவப் பெரியார்கள், திரு அ.ச.ஞானசம்பந்தம், முனைவர் வை.ரத்தினசபாபதி ஆகியோர் அடியேனுக்கு அடிக்கடி எடுத்துச்சொல்லி, ஊக்கமளித்து என் உள்ளத்திலே பல கருத்துக்களை ஆழமாகப் பதிய வைத்துச் செய்த ஒரு பெரும் தொண்டிற்கு நான் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னோடு பேசாமலே பேசி, அருள் பாலித்து, அன்பு உபதேசம் செய்து திருமந்திர மணிமாலையை வாழ்க்கை நூலென எடுத்துக்காட்டி ஆன்மிகச் சாதனைக்கான நெறிகளை உள்ளத்திலே உணர்த்திய தவத்திரு தேமொழியார் சுவாமிகள் அவர்களை நான் என்றென்றும் போற்றி வணங்குவன்.

இறைவன் திருவருளால் பல மாதங்களாகக் 'கலைமகள்' மாத இதழிலே, திருக்கோயில் இதழிலும் நான் எழுதி வந்த திருமந்திரக் கட்டுரைகள் என்னுடைய எண்ணங்களைத் தெளிவாக்கிக் கொள்ளப் பெரிதும் பயன்பட்டன. எனக்கு ஏற்பட்ட தெளிவினை மற்றவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் இந்த நூலை எழுதத் தொடங்கினேன். நான் எழுதியிருந்த கட்டுரைகளை இதற்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன். அந்தக் கட்டுரைகளைப் பிரசுரித்து என்னை கௌரவித்த ''கலைமகள்'' ஆசிரியர் அவர்களுக்கும், ''திருக்கோயில்'' ஆசிரியர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி உரித்தாகுக. காலப்போக்கில் என்னுடைய கருத்துகளில், எண்ணங்களில் தோன்றிய மாறுதல்கள் அடிப்படையில் இந்தக் கட்டுரைகளைப்பல இடங்களில் மாற்றி எழுதியிருக்கின்றேன்.

சென்னை விவேகானந்தா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, மாணவர்களிடையே நன்மதிப்பைப் பெற்று ஓய்வடைந்துள்ள டாக்டர் ப.ராமன் அவர்கள் ஒரு சிறந்த இறை உணர்வாளர். அன்பும், அடக்கமும் நிரம்பக் கொண்டவர். பாம்பன் சுவாமிகளுடைய தத்துவங்களை நன்கு கற்றுணர்ந்தவர். தமிழில் பல நூல்களை வெளியிட்டவர். என்னுடைய ஆன்மிகப் பணிகளுக்குப் பெரிதும் துணையாக இருப்பவர். அவர்கள் நான் எழுதிய கட்டுரைகளைப்படித்து, தமிழ் இலக்கண விதிகளுக்கு ஏற்ப அங்கங்கே திருத்தங்களைச் செய்து எனக்கு உதவியுள்ளது அவர்கள் என் மீது வைத்துள்ள பேரன்பிற்குச் சான்றாகும். மேலும் அவர்கள் அச்சுப் பிழைகளைத் திருத்தி, சரிபார்த்து இந்த நூல் நன்கு வெளிவருவதற்குப் பெரும் பங்கை ஏற்றுள்ளார்கள். அத்துடன் சிறந்ததொரு அணிந்துரையையும் வழங்கி இருக்கின்றார்கள். இப்பெரியாருக்கு நான் எவ்வாறு நன்றி சொல்வது என்று தெரியவில்லை.

எட்டாண்டுகளுக்கு மேலாக எனக்கு எழுத வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும்பொழுதெல்லாம் சற்றும் யோசியாமல் உடனே என்னிடம்

வந்து தட்டச்சுப் பணியை மேற்கொண்டு அழகுழறச் செய்து முடிக்கும் சிறந்த ஆற்றலைப் பெற்றிருப்பவர் எனது இனிய நண்பர் திரு அ.கமலக்கண்ணன் அவர்கள், நான் சொல்லுவதை முதலில் சுருக்கெழுத்தில் எடுத்துப்பிறகு தட்டச்சில் ஏற்றும் வழக்கம் இவருக்குக் கிடையாது. நான் சொல்லச் சொல்ல ஒரு பிழையுமின்றி நேரிடையாகவே தட்டச்சில் ஏற்றும் மெச்சத் தகுந்த திறனை அவர்கள் பெற்றிருக்கிற காரணத்தினால் என்னுடைய எண்ணங்கள் எழுத்து வடிவம் பெற அதிகம் நேரம் எடுத்துக்கொண்டதே இல்லை. இந்த நூல் முழுவதையும் அவ்வாறே செய்து முடித்துக்கொடுத்த திரு.அ. கமலக்கண்ணன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி உரித்தாகுக. இந்நூலில் மந்திர எண்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பதிப்பித்த திருமந்திரம் என்ற நூலில் உள்ளபடி கையாளப்பட்டிருக்கின்றன. திருப்பனந்தாள் சன்னிதானம் அவர்களுக்கு என்னுடைய நன்றியும் வணக்கமும் உரித்தாகுக. எனது வாழ்க்கையின் ஒளி விளக்காகத் திகழ்ந்து என்னை வழி நடத்தி வரும் திருவேற்காடு அன்னதான சிவம் தவத்திரு ஐயப்ப சுவாமிகள் அவர்களுடைய திருவடிகளைத் திருவருளின் திருவுருவம் எனப் போற்றிப் பணிந்து அகமகிழ்கின்றேன்.

''எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை
அவ்வாறு அருட்செவன் ஆதியரன் தானும்''

என்பார் திருமூலர் பெருமான்.

எனது அறிவுக்கெட்டியவரை நான் எழுதியுள்ள இந்த நூலில் கருத்துப் பிழைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைப் பொறுத்து, என்னைத் திருத்தியருள வேண்டுகிறேன்.

இவண்


டி.வி. வெங்கட்டராமன்



காணிக்கை

இருபது ஆண்டுகளுக்குக் கூடுதலாக நான் நெருங்கிப் பழகி வந்த அருமை நண்பர், **திரு. பழ. சிதம்பரம்** பதிப்புத் துறையில் பல சாதனைகளைப் படைத்தவர்; இயல்பாகவே ஆன்மீகத்தில் ஊறி நின்றவர். அவர்களின் நினைவுக்கு ஓர் காணிக்கையாக இந்த நூலை வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

- டி.வி.வெங்கட்டராமன்.



பொருளடக்கம்

முதற் பகுதி

1.	திருமூலர் - நான்மறை யோகிகளில் ஒருவர்	17
2.	வேதமும் ஆமமும்	31
3.	ஒன்றவன் தானே	44
4.	ஆதியோடு அந்தம் இலாத பராபரம்	82
5.	அரன் அங்கி தன்னில் சங்காரம்	91
6.	இன்னருட் சக்தி	101
7.	அன்னம் இரண்டு உள	114
8.	உறவெனும் பாசம்	126
9.	அன்பும் சிவமும்	135
10.	உள் நின்ற சோதி	143
11.	அறம் அறியாரே	152
12.	சூடுவன் நெஞ்சிடை வைப்பன்	162
13.	குருவே சிவம்	171
14.	ஐந்தெழுத்து மந்திரம்	181
15.	யோக வழியில்	190
16.	சிவன் உறை சிந்தை	200
17.	வென்ற ஐம்புலனால் மிக்கீர்	206
18.	மன வாலயம்	215
19.	ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்	224
20.	காணாத கண்கள்	234
21.	திருக்கூத்து தரிசனம்	242
22.	அறிவுதயம்	252
23.	நமன்வரின்	262

இரண்டாம் பகுதி

24.	ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்	269
25.	தூங்கிக் கண்டார் சிவயோகம்	278
26.	பேச்சற்ற பேரின்பம்	286
27.	அடியார் பெருமை	295
28.	அடியார் உள்ளம்	299
29.	அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி	308
30.	அருளாளர்களின் அருள் உணர்வுகள்	318
31.	அருளாளர் பெற்ற அறிவு	326
32.	ஆனந்த உணர்வு	335
33.	அருள் அனுபவம்	340
34.	அருளாளர்களின் மந்திர மொழி	349
35.	என்னை ஆண்டு கொண்டான்	357
36.	நின் பெருமையினால் பொறுப்பவனே	363
37.	தத்துவமசி மகாவாக்கியம்	371
38.	மறை பொருளும் மறை மொழியும்	380
39.	திருமந்திரச் செம்பொருள்	390
40.	உபதேசம்	403
41.	நான் பெற்ற இன்பம்	413
42.	திருமூலர் ஒரு சித்தர்	424

டி.வி. வெங்கட்டராமனின்

திருமூலர் அருளிய திருமந்திரம்

— அனுபவ உரை —

"அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே". (திருமந்திரம் - 1860)

நாயன்மார்கள் பலர் மக்கள் தொண்டினைச் செய்தே இறைவனின் அன்பினைப் பெற்றார்கள். தன்னலமற்ற தொண்டு அறத்திற்கு முத்தாய்ப்பு வைத்தது போலாகும். இளையான்குடி மாறன் நாயனார், அமர்நீதி நாயனார், அப்பூதி அடிகள் போன்றவர்கள் மக்கட்குப் பசியைத் தீர்ப்பதே பெரிய தொண்டாகக் கருதினார்கள். பசியால் வருந்தின அனைவர்க்கும் சோறிட்டார்கள். ''மெய்யடியார்கட்கு ஆன பணி செய்யும் விருப்பில் நின்றார்'' என்று சேக்கிழார் பெருமான் திருநீலகண்டரைப் போற்றுகின்றார். ''வேண்டும் யாவையும் இல்லை என்னாது கொடுக்கும் இயல்பில் நின்றவர்'' என்று இயற்பகையாரின் பெருமையை விளக்குகின்றார். திருவீழிமிழலையில் பஞ்சம் தீர்க்கும் பணியில் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டனர். திருநாவுக்கரசரின் உழவாரப் பணியின் மேன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டும் வண்ணம் இறைவன் ஞானசம்பந்தருக்கு மாற்றுக்குறையும் பொற்காசை வழங்குகின்றார். இதை உணர்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரின் தொண்டைப் பாராட்டி இறைவனிடம் வாசி தீரக் காசு நல்கும்படிக் கேட்டுக்கொள்கின்றார். இத்தகைய பெருமை வாய்ந்த அடியார்கள் வாழ்ந்த வாழ்வு முற்றிலும் அற வாழ்வு ஆகும். அதை நாம் அறிந்து நாமும் அவ்வழியிலேயே செல்ல வேண்டும். நமக்கு இருக்கக்கூடிய நாட்கள் மிகக் குறைவு. நமது உடலில் இருக்கும் சத்து மெல்ல மெல்லக் குறைந்து வருகிறது. விரைவில் பயனற்று விடும். செல்வம் சுருங்கினும் உள்ளம் சுருங்காது இருக்க அறப்பணியை மேற்கொள்ள வேண்டும். இதற்காகவே இறைவன் நம்முடைய வாழ்நாட்களை நீட்டித் தருகின்றான். இருப்பினும், அறத்தின் மேன்மையை நாம் அறியவில்லையே!

"ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தது கண்டும் அறம்அறி யாரே". (திருமந்திரம் - 281)

12. ''சூடுவன் நெஞ்சிடை வைப்பன்''

இறைவன் நமக்கு உடலை அளித்து, உடலுடன் பொறிகளையும் பொருத்தி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களையும் சேர்த்து, உயிரையும் இணைத்து வாழ்வெனும் பாதையில் நடக்க விடுகின்றான். நாம் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப மேலும் இன்ப துன்பங்களை அனுபவிக்கவும் நமக்கு வழிவகை செய்கின்றான். இதனுடைய நோக்கம் என்ன? உயிரானது பல பிறவிகளில் பல்வேறு அனுபவங்களைப் பெற்று, சிறிது சிறிதாக, மெல்ல மெல்ல முதிர்வடைந்து ஆன்மிகப் பேறு அடைந்து இறைவனுடைய திருவடிகளைச் சேர்வதே இந்த இயக்கத்தின் நோக்கமாக இருக்க முடியும். அவரவர்களுடைய வினைப்பயன் படி, ஆன்மிக முதிர்வினை மக்கள் அடைவார்கள். இதில் சந்தேகம் இல்லை. இதை உணர்ந்து கொள்ளாத மனிதர்கள் உடலும், உடலைச் சார்ந்த கருவிகளையும் புறத்தில் கிடைக்கும் இன்பத்தை அடைவதற்கு மட்டுமே பயன்படுத்த முற்படுவார்கள். ஐங்கருவிகளும், ஐம்புலன்களும் அந்தக்கரணங்களும் தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்குகின்றன. இதற்காகவா இறைவன் நமக்கு இவற்றையெல்லாம் அளித்தான்? இல்லை என்கிறார் நாவுக்கரசர் பெருமான். இறைவனை என்றும் வாழ்த்தவே நாம் வாய் என்னும் கருவியைப் பெற்றிருக்கிறோம். நமது நெஞ்சு அவனைப் பற்றி நினைக்கவே அளிக்கப்பட்டிருக்கின்றது. நமது தலை நன்றியுடன் அவனை வணங்குவதற்காகவே உடலில் பொருத்தப்பட்டுள்ளது.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்''

என்கிறார் அப்பர்பெருமான்.

இறைவன் காண்பதற்கு அரியவன் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால், அவன் நினைத்தோர் மனத்தில் தன்னைத் தொழுது அன்பு செய்வோர் நெஞ்சத்தில் என்றும் நுகரவல்ல இன்பப் பொருளாக இருக்கின்றான். எல்லோர்க்கும் எளிதாகக் கிடைக்கும் பொருளாக, தேனைப்போல, பாலைப் போல இனிக்கின்றான். அத்தகைய அனுபவப் பொருளைப் பற்றிப் பேசுவதற்காகத் தானே இந்த வாய் இருக்கிறது!